# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், றொம்மன்
## ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, ROMMEN
## ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, ROMMEN

## பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 21 - 2025*

### கல்வி

- ஆண்டிறுதிப் பொதுத்தேர்வு 23,24,25.05.25 (வெள்ளி,சனி,ஞாயிறு) இவ்வாரம் வகுப்பு நேரத்தில் சிறுவர் நிலை - ஆண்டு 12 வரை நடைபெறும்.
  - **1-5 வகுப்புகளுக்கு வினாத்தாளில் விடையளித்தல்.**
  - **6-12 வரை பகுதி 1 (பல்தேர்வு வினாக்கள்) இணையத்தில் விடையளித்தல். பகுதி 2 வினாத்தாளில் விடையளித்தல்.**
- தொடக்கநிலை, மழலையர் வகுப்புகள் வழமைபோல் நடைபெறும்.
- அனைத்துலகத் தமிழ் ஆண்டிறுதி எழுத்துத்தேர்வு 07.06.25 சனிக்கிழமை நடைபெறும்.

***ஆண்டிறுதிப் பொதுத் தேர்விற்கான பகுதி 1 இணையத்தில் (Forms) இல் நடைபெறும். எனவே 6 முதல் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் தங்களுக்குரிய தேர்வுக்குப் பயன்படுத்தக்கூடிய iPad அல்லது கணினி அல்லது கைத்தொலைபேசி அல்லது Surface ஐத் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும். அனைத்து மாணவர்களும் தேர்வுக்குத் தேவையான பொருட்களை (உபகரணங்களை) எடுத்துவரவும்.***

### நிதி

கட்டணங்களைச் செலுத்தும்படி வேண்டுகின்றோம். ஏற்கனவே செலுத்தியவர்கள் இத்தகவலை விலத்திச்செல்லவும். விவரம் தேவைப்படின் எம்மைத் தொடர்புகொள்ளவும்.

### உறுப்பினர் உரிமையை உறுதிப்படுத்துதல்!

அன்னை தலைமை மற்றும் எம்மால் வழங்கப்பட்ட கட்டண அறவீடுகள் முழுமையாகச் செலுத்தியவர்கள் மட்டுமே (3 மாதங்களுக்கு முன்னர் செலுத்தியிருத்தல் வேண்டும்.) அங்கத்துவத்துவ உரிமையினை உறுதிப்படுத்தியவர்கள் என்பதனை அறியத்தருகின்றோம்.

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் றொம்மன் வளாகத்தில் கற்றல் செயற்பாடுகளுக்குத் தகுந்த காரணம் அல்லது தகவலின்றி தொடர்ந்து பங்குபற்றாத மாணவர்களின் பெற்றோருக்குத் தனிப்பட்ட தகவல் அனுப்பிவைக்கவுள்ளோம்.

### தேர்வுக்குழு 2025

இவ்வாண்டு இலையுதிர் காலப்பகுதியில் ஆண்டுக்கூட்டத்தினை நடத்தலாம் என தீர்மானிக்கப்பட்டது. அதற்கு முன் அனைவரும் தங்களின் உறுப்பினர் உரிமையை உறுதிப்படுத்துமாறு அன்போடு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். நிர்வாகத்தில் இணைந்து பணியாற்ற ஆர்வமுள்ளவர்கள் விரைவாகத் தங்கள் விவரங்களைத் தெரிவுக்குழுவினருக்கு எழுத்துமூலமாக வழங்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.
நிர்வாகத் தெரிவுக்குழு மின்னஞ்சல்: valgkomite.rommen@annai.no

**நிர்வாகத்தில் இணைந்து கொள்பவர்களுக்கு இருக்கவேண்டிய முக்கிய தகமை!**

*அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் யாப்பு விதிகளுக்கும், நடைமுறைவிதிகளுக்கும் நோர்வே நாட்டு சட்டவிதிகளுக்கும் கட்டுப்பட்டு, கல்வி, கலை மற்றும் விளையாட்டு நிகழ்வுகளுக்குப் போதியளவு நேரம்விடக்கூடியவர்களாக இருத்தல் அவசியம். முக்கியமாக உறுப்பினர் உரிமையை முழுமையாகப் பெற்றவராக இருத்தல் வேண்டும்.*

## விளையாட்டு 2025

விளையாட்டுப் போட்டிக்கு பதிவதற்கான விண்ணபப்பபடிவமும், விளையாட்டுப்போட்டித் தகவல்களும் வகுப்புக் குழுக்களில் பகிரப்பட்டுள்ளன.

25.05.2025ம் திகதிக்கு முன்னர் விளையாட்டுப் பதிவுகளைச் செய்து, அதற்கான கட்டணத்தையும் செலுத்தவும். இதுவே பதிவு செய்வதற்கான இறுதிநாளாகும். பதிய முடியாதவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**ஆண்டுத்திட்டத்தின்படி விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ள நாள்கள் விவரம்:**

1. திங்கள் 09.06.2025 - குழை எடுத்தல் கிளித்தட்டு தெரிவுப்போட்டி
2. சனி 14.06.2025 - அரையிறுதி, கள இறுதிப் போட்டிகள்.
3. ஞாயிறு 15.06.2025 - 34ஆவது இல்லவிளையாட்டுப் போட்டிகள்.

- ❖ *மாணவர்கள் இவ் விளையாட்டுப்போட்டியில் கலந்துகொள்வதற்கு முன் Tamilsk Barn og Ungdom Idrettsklubb (TBUK) இல் உறுப்பினராகப் பதிவுசெய்தல் வேண்டும். இவ்விடயம் சார்ந்த ஒரு படிவம் மற்றும் PDF அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.*
- ❖ *விளையாட்டுப் போட்டிக்கான குழுவில் இணைந்து பணியாற்ற ஆர்வமுள்ளவர்கள் எம்மோடு தொடர்புகொள்ளவும்.*
- ❖ *விளையாட்டுப்போட்டிக்கான பதிவுகளை மேற்கொள்ளவும்.*

இக்கல்வியாண்டின் இறுதிநாள் - 15.06.2025

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது ஐயப்பாடுகள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***

***தொலைபேசி இல. 004740076104.*** **நன்றி!**

நிர்வாகம் - றொம்மன் வளாகம்

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்.